# பொதுக்காலம் 31ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

அன்பார்ந்தவர்களே! இயேசு கிறிஸ்துவில் பொதுக்காலத்தின் 31-ம் ஞாயிறான இன்று இறைவன் நமக்குத் தந்துள்ள கட்டளைகளைப் பற்றி சிந்திக்க இருக்கிறோம்.

இறையன்பு, பிறரன்பு என்ற இருவித கட்டளைகளை பற்றி கூறிய இயேசு மூன்றாவது கட்டளையாக இன்னோர் அன்பைப் பற்றியும் கூறுகிறார். மூன்றாவது கட்டளையா? அது என்ன? ஒருவர் தன்மீது அன்பு கூர்வதுபோல், அடுத்தவர்மீதும் அன்பு கொள்ள வேண்டும் என்கிறார். அடுத்தவர் மீது அன்பு கொள்வதற்கு ஓர் உந்துசக்தியாக தன்மீது கொள்ளும் அன்பை இயேசு குறிப்பிடுகிறார். நாம் நம்மீது அன்பு, அக்கறை, மரியாதை கொண்டிருந்தால்தான் அடுத்தவரையும் அன்பு செய்ய முடியும். அதுவும் அரைகுறையான அன்பு அல்ல. நம்மீதும், பிறர்மீதும் இறைவன்மீதும் முழுமையான அன்பு காட்ட வேண்டும் என்பதே இறைவனின் விருப்பம்.

முழுமையான அன்பைப் பற்றிய இயேசுவின் கூற்றைக் கேட்ட மறைநூல் அறிஞர் மனதில் மகிழ்ச்சி கொள்கிறார். தான் உணர்ந்து கொண்ட அன்பு கட்டளைகளை மறைநூல் அறிஞர் வாழ்ந்து கடைப்பிடிப்பார் என அவரது பதில்களின் மூலம் அறிந்து கொண்ட இயேசு மறைநூல் அறிஞரிடம் நீர் இறையாட்சிக்கு தொலைவில் இல்லை என்கிறார். நாமும் இறைவன் நமக்கு அளித்த கட்டளைகளின்படி வாழ்ந்து இறையாட்சியை நமக்கு சொந்தமாக்கிக் கொள்ள வரம் வேண்டி இப்பலியில் இணைவோம் .

### முதல் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே நம் ஆண்டவர். அவரை நாம் தலைமுறை தலைமுறையாக ஏற்றுக் கொண்டு, அவருக்கு அஞ்சி அவர் வழி வாழ்ந்திடும் போது பெற்றுக் கொள்ளக்கூடிய ஆசிர்வாதங்களை குறித்து எடுத்தியம்பும் இணைச்சட்ட நூலின் வாசகத்திற்கு செவிமெடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! பலியை விட சிறந்தது கீழ்ப்படிதல், இரக்கம், கடவுளைப் பற்றிய அறிவு. எல்லாவற்றிலும் சிறந்தது அன்பே. இந்த முழுமையான அன்பினாலே என்றென்றும் நிறைவுள்ளவரான குரு தம்மைத்தாமே பலியாக செலுத்தினார். எனவே வானங்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டவர் இவரே என்று கூறும் எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் வார்த்தைகளுக்கு கவனமாய் செவிகொடுப்போம்.

### மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. என்றென்றும் குருவாகிய எம் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவிகள் அனைவரும் தம் பணி வாழ்வில் உம்மை முன்னிறுத்தி, மக்கள் பணி செய்பவர்களாக வாழ்ந்திட வரம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கத்தின் இறைவா! நல்மழை பொழியவும் நாடு செழிக்கவும், கால்நடைச் செல்வங்கள் பெருகிடவும், அதன் மூலம் மக்களின் வாழ்வாதாரம் உயர்ந்திடவும். வரம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பின் இறைவா! நாங்கள் எங்கள் வாழ்வில் பிறரன்பு பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, பிறர்நலம் நாடுபவர்களாக வாழ்ந்திட வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. எங்களுக்காகப் பலியானவரே இறைவா! நாங்கள் பெற்றுக் கொள்கின்ற இறைவார்த்தைகளை வாழ்வின் மாற்றங்களுக்குப் பயன்படுத்தி, நல்ல கனிதரும் மரங்கள் போன்று வாழ்ந்திடவும் பிறரையும் நல்வழிக்கு அழைத்துச் செல்லும் முன்மாதிரியாக வாழ்ந்திட வேண்டுமென்று இறைவா வரம் தர உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி : ஆசிரியை திருமதி. ஞா. சொஸ்தினா மேரி, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com